தொன்மை

# புராணங்கள்

## இலக்கிய சான்றுகள்

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

என்கின்றார் தொல்காப்பியனார். தொன்மை என்ற சொல் தொல்காப்பியனார் காலத்தில் புராணத்தைக் குறித்தது, காலம் போக்கிப் இச்சொல் "பழமை" என்று மட்டும் பொருளுணர்த்தித் தான் சுட்டிய பெயரின் தனித்தன்மையை இழந்து விட்டது. இன்று 'தொன்மம்" என்ற சொல் 'மித்து' ( Myth ) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஈடாகக் கையாளப்படுகின்றது. தொன்மங்கள் பழங்கதைகள், அவை கூட்டுக் கற்பனையாலும், கூட்டு அனுபவத்தாலும் இணைந்து எழுந்தவை. இவை இலக்கியங்களினூடே வளர்ந்து கொண்டே இருக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில் கவுந்தி முன்னர் தோன்றி சாரணர் அருகதேவனின் பெருமையைப் பலபடக் கூறும்போது,

"பொருளன் புனிதன் புராணன் புலவன்" என்பர்

இதில் புராணன் என்பது "பழமையானவன்" என்ற பொருளிலேயே கையாளப் பெற்றுள்ளது.

ஊர்காண் காதையிலும் கவுந்தி வாயிலாக இராமன் கதையைச் சுருங்கக் கூறிய இளங்கோவடிகள், "நெடுமொழியன்றோ" எனக் கூறும்போது இராமாயணம் போன்ற கதைகள் தொன்றுபட வரூஉந் தொன்மையுடைய நெடுமொழியாகப் புராணத்தைக் குறிப்பதை உணர்கிறோம்.

மணிமேகலையில் மணிமேகலா தெய்வம் உலகப் பெண்டிர் வடிவந்தாங்கி மணியறைப் பீடிகை வலங்கொண்டு புத்ததேவனை வணங்கும்போது

புலவன் தீர்த்தன புண்ணியன் புராணன்

எனத் தொடங்குவாள். இங்கும் புராணன் என்பது பழமையானவன் என்ற பொருளிலேயே சீத்தலைச் சாத்தனாரால் கையாளப் பெற்றுள்ளது. சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதையில்,

காதல் கொண்டு கடல்வணன் புராணம்

ஓதினன் என வைணவ வாதம் வெளிப்படும். இங்கு புராணம் என்ற சொல் நூலைக் குறிக்காவிடினும் பழமைப் பண்பைக் குறிக்கிறது.

தேவாரப் பாடல்களில்

சம்பந்தர் - புராணன் - 1569

புராணனார்-1586 (காளத்தி அப்பர், பதிகம்)

அப்பர் - புராணர் (பூம்புகலூர் பதிகம் காளத்தி அப்பர் பதிகம்)

சம்பந்தர் - புராணர் (1406)

எனவும் திருமூலர் தம் திருமந்திரத்தில் ஆதிபுராணன் எனவும் (557) இறைவனின் பழம் பெருமையைச் சுட்டுவர். மணிவாசகர் சிவபுராணம் என்ற பகுதியைத் திருவாசகத்தில் பாடியுள்ளார். இங்கு புராணம் என்பது பழமையின் சிறப்பைச் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

## இலக்கணச் சான்றுகள் - புராணங்கள் விளக்கம்

யாப்பருங்கலம் ஒழிபியலில் சித்திரக் கவிமாலை பற்றிய நூற்பா வாயிலாக விளம்பனம் பற்றிய செய்திகளைக் காணும் போது

ஆரியம் தமிழொடு நேரிதன் அடக்கிய
உலகின் தோற்றமும் ஊழி யிறுதியும்
வகைசால் தொண்ணூற் றறுவர தியற்கையும்
வேத நாவின் வேதியர் ஒழுக்கமும்
ஆதிகாலத் தரசர் செய்கையும்
அவ்வவ் நாட்டார் அறியும் வகையில்
அடியும் பாடியும் அறிவுறக் கிளத்தல்

என அறிகிறோம். இவ்வியல்பைக் காணும்போது விளம்பனம் என்பது "கூறப்படுவது" என்றும் அதன் உட்பொருள் உலகத் தோற்றம், ஊழி இறுதி, 96 பேர் இயற்கை வேதியர் ஒழுக்கம், பழங்கால அரசர் செய்கை ஆகியவற்றை எடுத்துரைக்கும் எனலாம்.

வச்சணந்தி மாலை ஆசிரியர் கருத்துப்படி குலவரவு காரிகை யாப்பில் புராணமேயாம். புராண வரலாற்றைக் காணும் போது இக்கருத்து பெரிதும் பின்பற்றப் பெறாத நிலையிலேயே உள்ளது. பெரும்பாலான புராணங்கள் விருத்தப்பாவில் பாடப்பட்டுள்ளன.

நச்சினார்க்கினியர் சிலப்பதிகாரமும் இதன்பாற்படும் என்று கூறியுள்ளார். தொன்மை என்ற சொல்லுக்குப் புராணம் என்று பொருள் கொண்டுள்ளார்.

"வானவர் ஏத்தும் மறையோர் முதலிய
மக்களின் சோர்க்குத் தக்க தன்மையில்

பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற் றாறெனும் தொகைய தான
முற்பக ரியல்பை முன்னுறப் பாடும்
பிரபந்த மரபியலது பிரபந்த மரபியே

என்று பிரபந்த மரபியல் புராணத்தைப் பற்றிக் கூறுகிறது.

கருதசில குன்றினுமா காப்பியமாம் என்பர்
பெரிதறமே யாதி பிழைத்து- வருவதுதான்
காப்பிய மாகும் குலவரவு காரிகை
யாப்பிற் புராணமே யாம்

காப்பியம் குன்றாத சிறப்புடன் பெருமித நடையுடையதாகும் புராணம் சற்று தளரினும் பொருளுக்குச் சிறப்புத் தரக் கூடியது.

சிதம்பரப் பாட்டியலில்

அறையுமிதிற் சிலகுறைபா டெனினும் குன்றா
தறம்பொருளின் பல்வீட்டிற் குறைபாடாகப்
பெறுவது காப்பியமாகும் புராணமாகும்

என்று கூறுகிறது.

<u>நிகண்டு</u>:-

திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டு என்னும் மூன்று முக்கிய நிகண்டுகளும் பதினெண் புராணங்களின் பெயரையும் உரைக்கின்றன. மச்சம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்கம், பெடிகம், நாரதீயம், காருடம், பிரமகைவர்த்தம், மார்க்கண்டேயம், காந்தம், பிரமாண்டம், ஆக்கினேயம், பதுமம் என்பன அவற்றின் பெயராம்
(திவா 12- 165)

பிங்கலந்தையும், சூடாமணி நிகண்டும், இப்பெயர்களையே முறை சிறிது மாற்றி உரைக்கும் என வைணவ வாதம் வெளிப்படும். இங்கு புராணம் என்ற சொல் நூலைக் குறிக்காவிடினும் பழமைப் பண்பைக் குறிக்கிறது.

எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சாந்தி புராணம் என்பதைப் பதினாறாம் தீர்த்தங்கரராம் சாந்தி நாதர் புராணமாக இருத்தல் கூடும் என்பர்.

தேவாரப் பாடல்களில் சம்பந்தர், அப்பர், ஆகியோர் புராணன் (1569ச) புராணர் (பூம்புகலூர்.அப்) (14068) புராணனார் (1586ச) (காளத்தி.அப்) எனவும் திருமூலர் தம் திருமந்திரத்தில் ஆதிபுராணன் எனவே (557) இறைவனின் பழம் பெருமையைச் சுட்டுவர். மணிவாசகர் சிவபுராணம் என்ற பகுதியைத் திருவாசகத்தில் பாடியுள்ளார். இங்கு புராணம் என்பது பழமையின் சிறப்பைச் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

## வடமொழி புராணங்கள்

**தொன்மை :-**

நான்கு வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் புராணத்தின் சிறப்பு சொல்லப்படுகிறது.
ரிச: ஸாமாநி சந்தாம்ஸி புராணம் யஜுஷா ஸஹ உச்சிஷ்டா ஜஞ்ஜிரே ஸர்வே திவி தேவாதிபி; சரிதா" என்று அதர்வண வேதம் கூறுகிறது.

மேலும் அதர்வண வேத ஸம்ஹிதை புராணம் ருக், சாம, சந்த, யசுஸ் இவை ஒன்றாகத் தோன்றியவை என்று கூறுகிறது. புராணம் வேதங்களோடு தோன்றிய காரணத்தால் சதபதப்பிராம்மணம் புராணத்தை வேதம் என்றே குறிப்பிடுகிறது. கோபதப் பிராம்மணம் "ஏவம் இமே வேதா: நிர்மிதா ஸகல்பா; ஸரஹஸ்யா: ஸபிராம்மணா: ஸோப நிஷத்கா: ஸேதிஹாஸா ஸந்வயாக்யாதா: ஸபுராணா: ஸஸ்வரா என்று கூறுகிறது.

சதபதப்பிராம்மணத்தில்
ஸோயம் இதி கிஞ்சித் புராணம் ஆசக்ஷீத
என்று கூறப்பட்டுள்ளது.
"ஐசத ப்ராசவந்தாம் அநுச்ரம்ய ஸர்சக பிரதிபாதகம் வாக்ய ஜாதம் புராணம் என்று ஐதரேய பிராம்மணக் கூறுகிறது.

பிரகதாரண்யக உபநிஷத்தில், இதிஹாஸ: புராணம் வித்யா உபநிஷத: என்று கூறப்பட்டுள்ளது.

சாந்தோக்ய உபநிஷத் "ரிக்வேதம் பக்வோ அத்யேமி இதிகாச புராணம் பஞ்சமம் வேதநாம் வேதம்" என்று கூறுகிறது.

ஆபஸ்தம்ப தர்ம ஸீத்திரம், அத புராணே சுலோகாந் உதா ஹரந்தி அஸ்டாசீதி ஸஹஸ்ராணி ஒதி" என்று கூறுகின்றது.

சங்கரரும், குமாரில பட்டரும் புராணத்தைப் பற்றிக் கூறுகின்றனர். பாணபட்டன் என்ற கவிஞன் ஹர்ஷ சரிதத்தில் "புராணேஷு வாயு ப்ரலபிதம்" என்று கூறியுள்ளான். தர்ம சூத்திரங்களில் புராணத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

கௌடில்ய அர்த்தசாத்திரத்தில் "தத்ரஹி விநயேப்ய ராஜ புத்ரேப்ய, புராணாநி உபதேஷ்ட்வயம் இதி நிர்த்திஷ்டி என்று சொல்லப்பட்டுள்ளது. சந்திர குப்தருடைய காலத்திற்கு முன்பே புராணங்கள் இருந்தன என்று தெரிய வருகிறது.

யாக்ஞவல்க்ய ஸ்மிருதியில் "புராண நயாய மீமாம்ஸ தர்ம சாஸ்த்ராங்க மிச்ரிதா. வேதா ஸ்தாநாநி வித்யாநாம் தர்மஸ்ய ச சதுர்தச" என்று புராணத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

புராணங்களில் கலியுகங்களில் இருக்கின்ற அரசர்களின் வரலாறுகள் காணப்படுகின்றன. விஷ்ணு புராணத்தில் மௌரிய வம்ச வரலாறு காணப்படுகிறது. மத்ஸ்ய புராணத்தில் ஆந்திர அரசர்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பிரம்ம யக்ஞ தர்ப்பணத்திலும் இதிகாச புராணம் தர்ப்பயாமி" என்று சொல்லப்படுகிறது

<u>புராணங்களின் இலக்கணம்</u>:

சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மந்வந்தரம், வம்சானுசரிதம் எனப்படும் ஐவகை இலக்கணங்களும் புராணங்களில் அமைந்துள்ளன.

**சர்க்கம் :-**

நிர்க்குண உருவமாகவும், எங்கும் நிறைந்ததாகவும் எதிலும் வியாபித்ததாகவும், எல்லா உலகங்களுக்கும் ஆதாரமாகவும் யோக சாத்தியமாகவும், எந்தவொரு சிவசக்தி அடிப்படைப் பொருளாக இருக்கிறதோ, அந்தப் பராசக்தி ஒரு கூத்தினால் சாத்விகம், இராஜஸம், தாமஸம் என்னும் மூன்று சக்திகளாக மாறி, அச்சக்திகளில் சாத்விக சக்தி மஹாலக்ஷ்மி எனவும், இராஜஸ சக்தி சரஸ்வதி எனவும், தாமஸ சக்தி மஹாகாளி எனவும் பெயர் பெறும் என்று கூறி, சிருஷ்டி முதலான தொழில்களை முன்னிட்டு அந்த மூன்று சக்திகளின் திருமேனிகள் கைக் கொள்ளப்படும் என்றும் கூறி அவர்களின் தோற்றங்களை விவரிப்பது சர்க்கமாகும்

**பிரதி சர்க்கம் :-**

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத் தொழில்களை இயற்றுவதற்காக முறையே பிருமா, விஷ்ணு, ருத்திரர் என்போரின் உற்பத்தியைக் கூறுவது பிரதி சர்க்கமாகும்.

**வம்சம் :-**

சந்திரன், சூரியன், அக்னி ஆகியவர்களால் உற்பத்தியான இரணியகசிபு முதலான அசுரர்களின் வம்சத்தை விவரிப்பதாகும்.

**மன்வந்தரம் :-**

சுவாயம்பு முதலான பதினான்கு மனுக்களுடைய மன்வந்தரங்களின் வேறுபாட்டையும் அவர்களின் கால அளவுகளையும் விவரிப்பதாகும்.

வம்சானுசரிதம் :-

மேலே சொன்ன மனுக்களின் வம்ச வரலாறுகளை விவரித்துக் கூறுவதாகும்

இவ்வைந்தும் புராண லக்ஷணங்களாகும்.

ஐந்தாவது வேதம் :-

வியாச முனிவர் பதினெண் புராணங்களையும் இயற்றினார் அவற்றில் கூறப்படாத ஏனைய செய்திகளைத் தொகுத்து மகாபாரதம் என்னும் இதிகாச மகா காவியத்தையும் உருவாக்கினார்.

புராணம் இயற்றக் காரணம் :-

காலக் கிரமப்படி எல்லா மன்வந்தரங்களிலும் துவாபர யுகங்கள் வரும். ஒவ்வொரு துவாபர யுகத்திலும் தர்மத்தை நிலை நிறுத்துவதற்காக மகா விஷ்ணுவே வியாசராக அவதரித்து, ஜீவாத்மாக்களின் நலன்களை உத்தேசித்து ஒவ்வொரு வேதத்தையும் வேதாந்த வியாக்கியானங்களாக விவரிப்பதோடு, விதிப்படியே புராணங்களையும் இடையறாமல் இயற்றுகிறார். அதுமட்டுமல்ல கலியுகத்தில் தோன்றிய அந்தணர்கள் அற்ப ஆயுளை உடையவர்களாகவும் அற்ப அறிவுடையவர்களாகவும் இருப்பதை அறிந்து, யுகங்கள் தோறும் புண்ணியமான சம்ஹிதைகளை இயற்றுகிறார்.

குலாசாரங்கள் கெட்ட பிராமணர்கள், பெண்கள், சூத்திரர், இருகுலப் பிறப்பாளர்கள் முதலானவர்கள் வேதங்களைக் கேட்டும் உரிமை இல்லாதவர்களாதலால், அவர்களின் நன்மைகளை உத்தேசித்து, புராணங்களை இயற்றி வருகிறார்.

புராணத்தின் நோக்கமும், தத்துவமும்:-

எந்த வகையிலாவது மனிதர்களை மனிதர்களாக ஆக்கி, அடிக்கடி பிறவாமல், துக்கங்களை அனுபவிக்காமல் இறைவனிடம் இரண்டறக் கலக்கச் செய்வதே புராணங்களின் நோக்கம் வேதத்தின் உண்மைப் பொருளைப் பண்டிதர், பாமரர் அனைவரும் அறிந்து அநுஉஷ்டிக்கும்படி செய்வது புராணத்தின் நோக்கமும், தத்துவமுமாகும்.

புராண காலம்:-

புத்தர் காலத்திற்கு முன்னர் வழங்கி வந்தவற்றை முற்காலப் புராணம் எனவும், அவர் காலத்திற்குப் பின்னர் வழங்கியவற்றைப் பிற்காலம் புராணம் எனவும் பகுத்துள்ளனர்.

வேதத்திற்கும், புராணத்திற்குமுள்ள வேறுபாடு:-

வேத சிவாகமங்களாகிய முதல் நூல்கள், உயிர்க்கு உறுதி பயப்பனவற்றை அரசன் ஆணை போல கூறி மேற்கொள்ளச் செய்கின்றன. அதனால் அவற்றைப் "பிரபு சம்மிதை" என்பர்.

புராணங்கள் அவ்வாறின்றி, ஒரு நண்பன் மற்றொரு நண்பனுக்குத் தான் கூறும் அறிவுரையை நயமாகவும், இனிமையாகவும் கூறி மேற்கொள்ளச் செய்தல் போல இனியவை பயக்கும் கதைகள் வரலாறுகள் முதலியவற்றால் மக்களை நல்வழிப்படுத்துகின்றன. அதனால் அவற்றை "மித்திரசம்மிதை" என்பர்.

நண்பனிடம் தீமை கண்டால் பழங்கதைகளைக் கூறியும் புதிய நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டியும் விளைபயன் கூறியும் திருத்துவான். அதுபோல புராணங்களும், இதிகாசங்களும் மக்கட்

சமுதாயத்திற்கு நல்லன கூறியும் அல்லனவற்றைப் பல எடுத்துக் காட்டுகளைக் கூறி விளக்கியும் திருத்தத்தை அளிப்பன. எகிப்திய பாபிலோனிய நாடுகளிலும் உண்டு; இங்கும் உண்டு; எங்கும் உண்டு

## புராணம்:- இதிகாசம் வேறுபாடு:-

இராமாயண, பாரத இதிகாசங்கள் போல் ஒரே நாயக நாயகியைப் பற்றிய கதைகள் புராணங்களில் தொடர்ந்து இராது. கேட்போருக்கு ஏற்றபடி துண்டு துண்டாகவே கதைகள் கூறப்படும். ஒவ்வொரு கல்பத்தில் நடந்ததைக் கூறுவதால் ஒரே கதை வெவ்வேறு புராணங்கள் வெவ்வேறாகக் காணப்படும்.

## தமிழ் இலக்கியங்களில் இராமாயணம்

இராமாயணம் பாரத தேசம் முழுமைக்கும் உரியது. முற்சங்க நூல்கள் சிலவற்றில் இராம கதையின் பகுதிகள் சில காணப்படுகின்றன. புறநானூற்றில்,

கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ வருநகை யினிதுபெற்றிடுமே          புறம்-378

என காணப்படுகிறது. அகநானூற்றில்,

வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கு முன்றுறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவிந் தன்றால் இவ் அழுங்க லூரே          அகம்-70

என வந்துள்ளது.

மதுரைக் காஞ்சி என்னும் சங்கப் பாட்டில் இராவணனைப் பற்றிய செய்தியொன்று மிக்க தொன்மைக் காலத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

தென்னவன் பெயரிய துன்அருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய          (ம.கா.வரி 40-41) 41)

இங்கே 'தென்னவன்' என்றது இராவணனை, கடவுள் என்றது அகத்திய முனிவரை இம்முனிவர் பொதியிங்கணிருந்து இராவணனை கந்தருவத்தாற் பிணித்து அவன் உள்ளிட்ட இராக்கதர்களை ஆண்டு இயங்கமை விலக்கினார் என்பது பண்டைப் பௌராணிக வரலாறு.

கலித் தொகையில்,

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமார். துயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப்புகுந் தம்மலை
எடுக்கல் செல்லர் துழப்பவன் போல

என இராமாயணத்தின் உத்தரகாண்டச் செய்தியொன்று கூறப்பட்டுள்ளது

பரிபாடலில்,

இந்திரன் பூசை இவள் அகலிகை; இவன்
சென்ற கவுதமன்; சின்னுறக் கல்லுரு
ஒன்றிய படியிது என்றுரை செய்வோரும் (பாடல்-19)

என அகலிகை சாபம் பற்றிய சித்திரம் திருப்பரங்குன்றத்துச் சித்திர மண்டபத்தில் வ ரையப்பட்டிருந்ததெனக் குறிக்கப்பட்டுள்ளது.

இவள் கல்வடிவிற் கிடந்தாளெனக் காளிதாசர் (ரகுவம்சம் 12- 34) தெரிவிக்கிறார். வான்மீகி இங்ஙனம் கூறவில்லை.

கடலு மலையும் நேர்படக் கிடந்த
மண்ணைக் வளாகம் நன்வெயிற் றகளினும்
நொய்தா லம்ம தானே இஃதெவன்

குறித்தனன் நெடியான் கொல்லோ மொய் தவ
வாங்குசிலை யிராமன் தம்பி யாங்கவன்
அடிபொறை யாற்றி னல்லது
முடிபொறை யாற்றலன் படிபொறை குறித்தே

(-தொல் பொருளதிகாரம் 76 நச்)

அன்றியும், புறத்திரட்டு என்னும் தொகை நூலில் தொகுக்கப் பட்டுள்ள செய்யுட்கள் சில இவ் இராமாயணத்தைச் சார்ந்தன என்றும் கருதல் தகும். கீழ்வரும் செய்யுள் உதாரணமாகும்.

இருசுடர் வழங்காப் பெருமூ திலங்கை
நெடுந்தோள் இராமன் கடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த வைபங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினும் எயிற்புறத் திறுத்தலிற்
கடல்சூழ் அரணம் போன்ற
உடல்சின வேந்தன் முற்றிய ஊரே (புறத் 1333)

இவற்றை ஆழ்ந்து நோக்குமிடத்து, முற்சங்கச் செய்யுட்கள் தொகுக்கப்பட்ட பின்னர், சுமார் கி.பி.650-ல் இராமாயணங்கள் சில தமிழ் மொழியில் இயற்றப்பட்டிருந்தன என தோன்றுகிறது. இவற்றிலுள்ள சில சரிதப் பகுதிகள் தமிழ் மக்கள் உள்ளத்தைப் பிணித்து வசீகரித்தன என்றும் எண்ணலாம்; சிலம்பில்,

பெருமகன் ஏவ லல்லது யாங்கணும்
அரசே தஞ்சமென்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போல
பெரும்பெயர் மூதூர் பெரும்பே துற்றதும். (காதை 13 63-66)

இப்பகுதி இராமன் தன் தந்தையின் ஏவலை மேற்கொண்டு லட்சுமணனும், சீதையும் உடன்வர நகர்நீங்கிக் காடு சென்ற பொழுது, அயோத்தி நகரம் வருந்தியதைக் குறிப்பது. இப்படியே லட்சுமணனை அருஞ்சேவையைக் குறித்துப் பெருங்கதை பின்வருமாறு கூறுகிறது.

இறைமீக் கூறிய இராமன் தம்பி
மறுவொடு பெயரிய மதலைக்கு இயைந்த
ஆனாப் பெரும்புகழ் யாகமும் எய்தத்
தேனார் தாமரைத் திருந்துமலர்ச் சேவடி
வழிபா டாற்றும் (காண்டம் 3,24,90-94
(3) 24, 90-94)

இராமாயண நிகழ்ச்சி இந்த நாட்டவருக்கு மிகமிகப் பழைய செய்தியாதலால் தான் மணிமேகலையில் சாத்தனார் காயசண்டிகையில் பெரும்பசிக்கு உவமை கூறுகிறார்.

நெடியோன் மயங்கி நிலைமிசைத் தோன்றி
அடலரு முந்நீரடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறுபுக் காங்கு (மணி 17: 9-21)

தன்பிழை உணர்ந்து வருந்திய கோவலனுக்கு ஆறுதல் மொழி கூறப்போந்த கவுந்தியடிகள்,

தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோன் என்பது
நீயறிந் திலையோ நெடுமொழி யன்றோ
ஊர்காண் 46-49

என்று கூறுகின்றார்.

இடைச் சங்க காலத்திலிருந்த தமிழ்ச் சான்றோர்கள் செய்த இராமாயணத்தில் அமைந்து கிடந்த கதை நிகழ்ச்சியின்படி காதல் மணமாகப் பாடினார். தாமே கற்பித்துக் கொண்டு பாடவில்லை என்பது,

ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராமன் அவனொரு
மிதிலை மூதூர் எய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மாக்கட் சீதை
கடுவிசை வில்ஞாண் இடியொலி கேளாக்
கேட்ட பாம்பின் வாட்டம் எய்தித்
துயிலெழுந்து மயங்கின ளதான்று.

இப்பாவால் அறியலாம்.

(தொல்காப்பியத்தில் கைக்கிளை திணைக்கு நச்சரால் எடுத்துக் காட்டாகக் காட்டப் பெற்றுள்ளது)

## அடிக் குறிப்புகள்

1. புறநானூறு பாடல் 378
2. அகநானூறு பாடல் 70
3. மதுரைக் காஞ்சி வரி 40-41
4. கலித்தொகை பாடல் 38
5. பரிபாடல் பாடல் 19
6. தொல்காப்பியம் பொருளதிகாரம் 76 நச்
7. புறத்திரட்டு 1333
8. சிலப்பதிகாரம் காதை 13 வரி 63-66
9. பெருங்கதை காண்டம் 3. 24, 90-94
10. சீத்தலைச் சாத்தனார் மணிமேகலை 17, 9-21
11. சிலப்பதிகாரம் ஊர்காண்காதை; 46-49
12. தொல்காப்பியம் நச்சர் உரை கைக்கிளைத் திணை உதாரணப் பாடல்

## அடிக்குறிப்புகள்

1. The Early History of India III Ed. Page No.23

2. தொல்காப்பியர், தொல் காப்பியம் செய்யுளிடம் 237

3. தேவகி முத்தையா, அபிராமி அந்தாதி ஆராய்ச்சி பக்கம்-31

4. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம்,நாடுகாண்காதை 10,179

5. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம்ஊர்க்காண்காதை 14; 49

6. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை காதை 5, வரி 98

7. சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை காதை27, வரி 98-99

8. யாப்பருங்கலம் ஒழிபியல்

9. வெண்பா பாட்டியல்

10. பிரபந்த மரபியல்

11. சிதம்பரப் பாட்டியல்

12. திவாகரம் நிகண்டு XII 165

## தொன்மை

தொன்மை என்பது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட நிகழ்வு களைச் சுட்டுவதாகும். வேதங்களும், புராணங்களும், இதிகாசங்களும் தொன்மையான செய்திகளைக் கூறும் இலக்கியங்களாகும்.

'புராணம் கி.மு நான்காம் நூற்றாண்டிற்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும்' என்பார், வி.சிமித்[1] புராணம் என்ற சொல் புரா நவம் என்ற இரு சொற்களால் ஆனது. புரா - பழமை, நவம் - புதுமை. புராணம் என்பது பழமையைக் காலத்திற்கேற்ப புதிய முறையில் கூறுவதாகும்.

**இலக்கியச் சான்றுகள்:**

'தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே' 2 என்றார்

தொல்காப்பியர்.

'தொன்மை' என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் புராணத்தைக் குறித்தது. காலப்போக்கில் 'பழமை' எனும் பொருளை உணர்த்தி, தான் சுட்டிய பெயரின் தனித்தன்மையை இழந்து விட்டது. இன்று 'தொன்மம்' என்ற சொல் 'மித்து'(Myth) என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக கையாளப்படுகிறது.

---

1. I may add that Puranas in some shape were already Authoritative in the fourth Century B.C.

தொன்மங்கள், பழங்கதைகள் அவை கூட்டுக் கற்பனையாலும், கூட்டு அனுபவத்தாலும் கிளர்ந்து எழுந்தவை. இவை இலக்கியங்களினூடே வளர்ந்து கொண்டே இருக்கின்றன.[3]

சிலம்பில் நாடுகாண் காதையில் கவுந்தி முன் தோன்றிய சாரணர் அருகதேவனின் பெருமைகளைக் கூறுங்கால்,

'பொருளன் புனிதன் புராணன் புலவன்'[4] என்கிறார். இதில் 'புராணன்' என்ற சொல் 'பழமையானவன்' என்ற பொருளில் வந்துள்ளது.

ஊர்காண் காதையிலும் கவுந்தியடிகளின் வாயிலாக இராமனின் கதையைக் கூறும் இளங்கோவடிகள், 'நெடுமொழியன்றோ'[5] என்று கூறுவதன் வழி இராமாயணம் போன்ற கதைகள் கொன்றுபட வருஉந் தொன்மையுடைய நெடுமொழியாகப் புராணத்தைக் குறிக்கக் காணலாம்.

மணிமேகலையில் மணிமேகலாதெய்வம் பெண்வடிவை ஏற்று மணியறைப் பீடிகை வலங்கொண்டு புத்ததேவனை வணங்குங்கால்,

'புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்'[6] என்று தொடங்கக் காணலாம். இங்கும் 'புராணன்' 'பழைமையானவன்'

---

3.

4.

5.

6.

என்று பொருள்பட சாத்தனார், கையாண்டுள்ளார். சமயக் கணக்கர் தந்திறங்கேட்ட காதையில்,

'காதல் கொண்டு கடல்வணன் புராணம்'
ஓதினன்'[7]

என்ற தொடரிலும் புராணம் என்பது பழமைப் பண்பைச் சுட்டுகிறது.

தேவாரப் பாடல்களில்,

சம்பந்தர் - புராணன் (1569)
புராணனார் (1586 காளத்திஅப்பர் பதிகம்)
அப்பர் - புராணர் (பூம்புகலூர் பதிகம்
காளத்தி அப்பர் பதிகம்)
சம்பந்தர் - புராணர் (1406)

எனவும், திருமூலரின் திருமந்திரத்தில் ஆதிபுராணன் (557) எனவும் இறைவனின் பழஞ்சிறப்பு கூறப்படுகிறது. மாணிக்கவாசகரின் சிவபுராணம் என்ற பகுதியிலுள்ள புராணம் பழமையின் சிறப்பை உரைப்பதாகக் கொள்ளலாம்.

<u>இலக்கணச் சான்றுகள்:</u>

யாப்பருங்கலம் ஒழிபியலில் சித்திரக்கவி மாலை பற்றிய நூற்பாவின் வழி 'விளம்பனம்' பற்றிய செய்திகளைக் காணுங்கால்,

---

7.

ஆரியம் தமிழொடு நேரிதன் அடக்கிய
உலகின் தோற்றமும் ஊழி யிறுதியும்
வகைசால் தொண்ணூற் றறுவர தியற்கையும்
வேத நாவின் வேதியர் ஒழுக்கமும்
ஆதிகாலத் தரசர் செய்கையும்
அவ்வவ் நாட்டார் அறியும் வகையில்
ஆடியும் பாடியும் அறிவுறக் கிளத்தல். [8]

என அறியலாம். இதில் விளம்பனம் என்பது, உலகத்தோற்றம், ஊழி இறுதி, 96பேர், இயற்கை, வேதியர், ஒழுக்கம், பழங்கால அரசர் செய்கை ஆகியவற்றை விளக்கும் எனலாம்.

கருதுசில குன்றினுமக் காப்பியமாம் என்பர்,
பெரிதறமே யாதி பிழைத்து - வருவததான்
காப்பிய மாகும் குலவரவு காரிகை
யாப்பிற் புராணமே யாம்'. [9]

என்ற அடிகளின் மூலம் வச்சணந்தி மாலை ஆசிரியர் கூற்றுப்படி குலவரவு காரிகை யாப்பில் புராணமாகும். நச்சினார்க்கினியரும், 'தொன்மை' என்ற சொல்லுக்குப் 'புராணம்' என்று கூறியுள்ளார்.

---

8.

9.

வானவர் ஏத்தும் மறையோர் முதலிய
மக்களின் னோர்க்குத் தக்க தன்மையில்
பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற் றுறெனும் தொகைய தான
முற்பக ரியல்பை முன்னுறப் பாடும்
பிரபந்த மரபியலது பிரபந்த மரபியலே.[10]

என்று பிரபந்த மரபியல் புராணத்தைப் பற்றிக் கூறுகிறது.

சிதம்பரப் பாட்டியலில்,

"அறையுமிதிற் சிலகுறைபா டெனினும் குன்றா
தறம் பொருளின் பம் வீட்டிற் குறைபாடாகப்
பெறுவது காப்பியமாகும் புராணமாகும்".[11]

என்று கூறுகிறது.

**நிகண்டு:**

திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டு என்ற மூன்று முக்கிய நிகண்டுகளும் பதினெண் புராணங்களின் பெயர்களையும் கூறுகின்றன.

மச்சம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலைங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம்,

---

10.

11.

பிரமகைவர்த்தம், மார்க்கண்டேயம், காந்தம், பிரமாண்டம், ஆக்கினேயம் பதுமம் என்பன அவற்றின் பெயர்களாகும்.[12]

பிங்கலந்தையும், சூடாமணி நிகண்டும் இப்பெயர்களையே சிறிது முறைமாற்றிக் கூறும்.

பழம் இலக்கியங்கள் அனைத்தும் கதைகள் மூலமாக மக்களினத்திற்கு அறவழியில் நல்லுரைகளை வழங்கி வருகின்றன. அவ்வாறு கூறப்படும் கதைகளுள் பெரும்பாலானவை தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் ஏற்படும் போராக முடிவடைகின்றன. ஆனால், தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் ஏற்படும் கசப்பான செயல்கள் யாவும் போராக உருவெடுப்பதில்லை. தேவர்களின் செயல்பாட்டினை,

"தேவர் அனையர் கயவர் அவருந்தான்
மேவன செய்தொழுக லான்"

என்று வள்ளுவர் கூறுகிறார்.

சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில், மணிமேகலையின் தோழியான மாலதி மூலம் தேவர்களின் கயமைத் தன்மையை விளக்குகிறார். புகார் நகருக்கு இந்திரவிழாக் காண தேவர் உலக விஞ்சையர்கள் வருகின்றனர். வந்த விஞ்சையிரில் ஒருவன் தற்காலத்தில் சீர்காழி என்று வழங்கப்படும் பகுதியில் அழகே வடிவெடுத்த பெண்ணாக நிற்கும்

---

12.

மாலதியைப் பார்க்கிறான். உடன் அவளை அவள் விருப்பமின்றியே எடுத்துச் சென்று விடுகிறான். அவளும், அவன் செயலிலிருந்து தப்ப இயலாமல் அவன் எண்ணம் நிறைவேற இடம் கொடுத்து விடுகிறாள்.

நான்முகன் கோபம் கொண்டு வருணனை மண்ணுலகில் சந்தனு என்னும் மன்னராகப் பிறக்குமாறு சாபமிட்டார். அத்துடன் கங்கையையும் மண்ணுலகம் சென்று சந்தனுவின் ஆசைகளைப் பூர்த்தி செய்து, பின் வானுலகம் வருமாறு கட்டளையிட்டார்.

அவ்வாறே, கங்கையும் வானுலகிலிருந்து மண்ணுலகிற்கு இறங்கி வந்து கொண்டிருந்தாள், வரும் வழியில், வசிட்டர் சாபத்தால் மண்ணுலகில் பிறந்து வருந்திக் கொண்டிருக்கும் வசுக்கள் எண்மரைக் கண்டாள். கங்கை, வசுக்களின் துன்பத்திற்கான காரணத்தை வினவினாள். அதற்கு வசுக்கள் எண்மரும், வசிட்டர் வீட்டில் கட்டியிருந்த பசுவைத் திருடியதாகவும், அத்திருட்டிற்குக் காரணம் வசுக்கள் எண்மரில் மூத்தவர் தன் மனைவியின் பேச்சைக் கேட்டு திருட அழைத்தார். எண்மரும் வசிட்டரின் காமதேனு பசுவைக் கவரும் போது வசிட்டர் பார்த்து விட்டார். அதனால், அவரின் சாபத்திற்கு ஆளாக நேர்ந்தது, என்றனர். இதைக் கேட்ட கங்கை "மண்ணுலகில் பிறப்பதற்காக வருத்தப்படவேண்டாம். நான் மண்ணுலகம் சென்று கொண்டிருக்கிறேன். வருணன் நான்முகன் சாபத்தால் மண்ணுலகில் சந்தனு என்னும் அரசனாகப் பிறந்து என்னுடன் கூடிவாழ இருக்கிறான். அப்போது எனக்கு மகனாகப் பிறந்து விடுங்கள். நான் நீங்கள் பிறந்தவுடன் உங்களைக் கங்கையில் வீசி கொன்று விடுகிறேன்", நீங்கள் உடனே வானுலகம் சென்றுவிடலாம்" என்றாள், வசுக்களும் மகிழ்ந்தனர்.

மண்ணுலகில் மன்னனாகப் பிறந்த சந்தனு கங்கையைக்

கண்டு காமுறுகிறான். கங்கையிடம் திருமணம் செய்து கொள்ள விழைவதாகக் கூறுகிறான். கங்கை, தன்னை மணம்புரிந்து கொள்ள வேண்டுமானால், தனக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்தவுடன் கொன்றுவிட சம்மதிக்க வேண்டுமென உறுதிமொழி வாங்கிவிடுகிறாள். உறுதிமொழியை மீறும்போது தான் அவனை விட்டு விலகிவிடுவதாகவும், கூறுகிறாள். அந்த நிபந்தனையின் படியே கங்கைக்குப் பிறக்கும் (ஏழு வசுக்களையும், ஏழு குழந்தைகளையும் கங்கை கொல்லும்போது சந்தனு தடுக்கவில்லை. எட்டாவது குழந்தை பிறந்தபோது கொல்லக் கூடாது என்று தடுத்து விடுகிறான். தனக்குப் பிறந்த குழந்தையைக் கொல்லக் கூடாது என்று சந்தனு தடுத்ததால், ஒப்பந்தத்தை மீறி விட்டதாகக் கூறி, கங்கை சந்தனுவிடமிருந்து பிரிந்து செல்கிறாள். இங்கே, எட்டாவதாகப் பிறந்த குழந்தை வசுக்களிலே மூத்தவன் ஆவான். அவன்தான் தன் மனைவியின் பேச்சைக் கேட்டு வசிட்டரின் காமதேனுவைத் திருட ஏற்பாடு செய்தவன். அதனால், வசிட்டரும் பெண்பேச்சைக் கேட்டு, இக்களவைச் செய்ய முற்பட்டதால், நீ மண்ணுலகில் பெண்துணை இன்றியே நீண்டநாள் வாழ்வாயாக என்றும் சபித்திருந்தார். வசிட்ட முனிவரின் சாபம் பலிப்பதற்கு ஏற்ற காலம், வந்துவிட்டதால், எட்டாவது குழந்தை பிறந்தவுடன் சந்தனுவிற்கு கங்கை மேல் இருந்த மோகம் நீங்கி, பிள்ளைப் பாசம் வந்துற்றது.

இவ்விடத்தில் சிந்திக்க வேண்டியது எதுவெனில், கங்கை தனக்குப் பிறந்த ஏழு குழந்தைகளையும் கொன்றது சரியா? கொலைக்

குற்றம் ஆகாதா? குற்றம் புரிந்தோர் யாராயினும் அவர்களைத் தண்டிக்க வேண்டிய மன்னனே, உடந்தையாக இருந்தது எதனால்? தவறுகளைச் செய்த சந்தனுவின் மனைவியாக இருந்த கங்கை எவ்விதத்தில் குற்றமற்றவள்? என்ற வினாக்களுக்கு விடை காணவேண்டியதாகும்.

இதற்கான காரணத்தை ஆராயும் பொழுது, பிறப்பிற்குக் காரணம் ஆண், பெண் ஆகிய இருவர் மட்டுமல்லர். அவர்களை விளையாட்டுப் bLi பொம்மைகளைப் போல் வைத்துக் கொண்டு உலகினை இயக்கிவரும் இறைவனின் ஆணை என்பதை உணர வேண்டும். நாம் எண்ணியவாறு நம்மால் பிறக்க இயலாது.

தேவர்களின் பிறப்பிற்குக் காரணம் அவர்கள் செய்யும் தவறுகளோ, அவர்களின் பிறப்பை வேண்டி முனிவர்களின் வேண்டுதலோ, சாபமோ காரணமாக அமைகின்றது.

மனிதன் மீண்டும், மீண்டும் பிறப்பதற்குக் காரணம் கூறும் போது, 'அவா பிறப்பீனும் வித்து' என்று ஆசையே பிறப்பிற்குக் காரணம் என்பதை உணர்த்துகிறது.

ஆனால், சந்தனு, கங்கை இருவர் செயலிலும் மண்ணுலகில் அவர்கள் பிறந்ததற்கும், தனக்குப் பிறந்த குழந்தைகளைக் கொன்றதற்கும் காரணம் இருவரில் ஒருவரான சந்தனுவிற்குப் புலப்படவில்லை. கங்கை உணர்ந்திருந்தாள். நான்முகன் அவையில் காற்றில் அவள் ஆடை குலைந்து நிற்பதைக் கண்டு வருணன் ரசித்து மகிழ்ந்திருந்தது தான் கங்கை

மண்ணுலகிற்கு வரக் காரணமாக அமைந்தது.

வருணன் ஒரு பெண் ஆடை குலைய நிற்கும்போது அதனைக் காண்பது தவறு என்று உணர்ந்திருந்தும், கண்டு ரசிப்பதையே சரியென எண்ணியதால், அவன் மண்ணுலகில் பிறந்தவுடன் முந்தைய பிறப்பை மறந்து விட்டான். கங்கையோ வருணன் காணவேண்டும் என்று ஆடை குலைய வரவில்லை. எதிர்பாராவிதமாக ஆடை குலைந்தது, எனினும்,

'கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகாள்' என்ற நிலையில் மாற்றானான வருணனில் உளம் புகுந்ததால் மண்ணுலகில் பிறக்க நேர்ந்தது. பிறப்பினும், தன் பழம் நினைவுகளை மறக்காமல் இருந்தாள். வசுக்களிடம் தான் கூறிய உறுதிமொழிகளை நிறைவேற்றவே தனக்குப் பிறந்த குழந்தைகளைக் கொன்றாள். இது தேவரகசியம். இதை அறியாமல், நாம் குறை கூறக் கூடாது. ஏழு குழந்தைகளையும் கொல்வதற்குத் துணை போன சந்தனு அதற்குப்பின், பரிமளகந்தியின் மேல் கொண்ட காதலால் எட்டாவது குழந்தையாகப் பிறந்த வசுக்களில் மூத்தவனான பிரபாசன் மண்ணுலகில் தேவவிரதன் என்ற பெயரில் திருமணம் செய்து கொள்ளாதவனாக வாழ நேர்ந்தது. இதற்கான காரணத்தை அவர்கள் பிறப்பதற்குக் காரணமான இறைவனால் கூறப் படாதவரையில் நம்மால், உணர முடிவதில்லை. இதேபோன்று, தான் அகலிகையின் கதையும் செல்கிறது.

அகலிகையின் கதை மிகவும் தொன்மையானது. வான்மீகருக்கும் முற்பட்டது. வான்மீகி, தான் தொகுத்து எழுதிய இராமாயணக்

கதையில் முதன்முதலில் வெளிக்காட்டுகிறார். காலத்தால் முற்பட்ட கதை ஒன்றைக் கையாளும் போது அதில் வரும் நிகழ்வுகளில் சிலவோ, பலவோ வேறுபாட்டினை அடைந்துவிடுவது இயல்பு. அவ் வேறுபாடு எழுதப்படும் கால சமுதாய அமைப்பிற்கேற்ற வகையில் மாறுபட்டு அமைகிறது.

அகலிகை கதையில் வரும் வேறுபாடுகளும் இவ்வாறே அமைந்தவை தான். இப்பழம் பெருங் கதையைக் கூறும்போதே, இதே போல், சில அறச் செயல்களைத் தன் காலத்திலும், பிற்காலத்திலு உணர்ந்து கொள்ளும் வகையில் கூறப்பட்டுள்ளது.

அகலிகைப் படலத்தில் கம்பர் பின்வரும் கிளைக்கதைகளான திதியின் கதையையும், பகீரதன் கதையையும் கூறுகிறார்.

## காவியப் படைப்பாளர்கள் தத்தம்

படைப்புகளில் பல்வேறு கிளைக்கதைகளை அங்கங்கே எடுத்தாண்டுள்ளனர். இத்தகைய கிளைக்கதைகளையும் படைப்பாளர்களையும் பல்வேறு கோணங்களில், பல்வேறு காரணங் கருதி படைத்துள்ளதாகத் தெரிகிறது. இது சில கிளைக்கதைகள் கதை நிகழ்விற்குத் துணை நிற்கும். இன்னும் சில கதைத் தலைவரின் பண்பின் உயர்விற்குத் துணை செய்யும். வேறுசில காவியம் நூலவோர் சொல்ல விழையும் அறக்கருத்துக்களை நிலைநாட்டவும், துணை மாந்தர்களின் சிறப்பை வெளிக் கொணரவும் பயனாகின்றன. அதோடு இறைவனின் அருளையும், பண்புகளையும் வெளிப்படுத்தவும் கவிஞர்கள் கிளைக்கதைகளைக் கையாண்டுள்ளனர். அந்த வகையில் கம்பனின் அகலிகைப் படலத்தில் இடம் பெற்ற கிளைக் கதைகள் எந்த நோக்கத்திற்காக எடுத்தாளப்பட்டுள்ளன. என்பதை சற்று ஆய்ந்து நோக்கலாம்.

### தீயின் தவம் :-

விசுவாமித்திரரும், இராம, இலக்குவரும் சோனை நதிக்கரையில் அமைந்த ஒரு நறுஞ்சோலையில் இளைப்பாறினர். அச்சோலையின் சிறப்பை இராமன் அறிய விழைந்தான். கௌசிக முனிவர் சோலையின் தன்மையை விளக்கினான்.

காசிபன் என்ற முனிவன் முன்பொரு காலத்தில் வாழ்ந்தான். அவனுடைய மனைவி திதி என்பவளாவாள். திதியின் மைந்தர்களான அசுரர்கள் தேவர்களால் அழிந்தனர். அதனால், மிக்க துயருற்ற திதி, இந்திரனையும், தேவர்களையும் அழிக்கத்தக்க புதல்வன் ஒருவனைப் பெற வேண்டி கடுந்தவம் இயற்றினாள். அவள் இருந்து தவம் செய்தது இந்தச் சோலையாகும்.

<u>மாலை பெறல்</u>:-

திருமால் உறையும் பதியை, விஞ்சைமகள் ஒருத்தி சென்றடைந்தாள். திருமகளை விஞ்சைமகள் வாயாரப் புகழ்ந்து பாடினாள். அப்பாடலால், மகிழ்வுற்ற திருமகள், பூமாலை ஒன்றைப் பாமாலை பாடியவளுக்குப் பரிசிலாக வழங்கினாள். வித்தியாதர மங்கை அம்மாலையைத் தன் யாழில் கட்டிக் கொண்டு பிரமலோகத்திற்கு மீண்டும் வந்தாள். வழியில் துர்வாச முனிவரை எதிர்கண்டாள். முனிவர் இலக்குமி அளித்த மாலையுடன் வந்தவளை வணங்கி நிற்க பரிசிலாகப் பெற்ற மாலையை முனிவருக்கு அன்புடன் அளித்தாள். தெய்வ நாயகி இலக்குமியின் சென்னிமிசை சூடிய மலர் மாலையைத் தாம் பெறுவதற்குரிய பெறற்கரிய தவப்பேற்றினை எண்ணி வியந்து, மகிழ்வுடன் தான் பெற்ற சுயமாலையைத் தன் தலையில் சூடிக் கொண்டு, முனிவர் விண்ணுலகை அடைந்தார்.

முனிவரின் செயல்:-

முனிவர் செல்லுங்கால், இன்னிசை முழங்க, தேவமாதர் நடனமாட, மங்கல வாழ்த்தும், மறைஒலியும் கடல் ஒலிபோல் பரவ, இந்திரன், தன் யானை ஐராவதத்தின் மீது உலா வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டு மகிழ்ந்த, துர்வாசமுனிவர் தான் பெற்ற மாலையை இந்திரனுக்குக் கொடுக்க, அவன் கையில் வாங்காமல், அங்குசத்தால் வாங்கி, ஐராவதத்தின் பிடரியில் சூட்டினான். ஐராவதம், மாலையை எடுத்து மண்ணிலிட்டு, தன் காலால் அழித்தது. இந்திரனின் செயல்பாடு கண்ட முனிவர், கடுஞ்சினம் கொள்ள, தேவர்கள் அஞ்சி அகன்று ஓடினர். எட்டுத்திக்கும் இருள் சூழ்ந்தது. முனிவர், இந்திரனை நோக்கி, "பூதநாயகன், புவிமகள் நாயகன், பொருவிலா(ஒப்பிலா) வேத நாயகன் மார்பில் வீற்றிருக்கும் ஆதி நாயகியான திருமகள் அணிந்த மாலையை என் தவச்சிறப்பால் பெற்றேன். இன்று உன் செவ்வி கண்டு மகிழ்ந்த நான் அம்மாலையை உனக்கு அளிக்க இகழ்ந்தனை. ஆதலின் உன்னுடைய மாநிதியும், பல்வகைச் செல்வங்களும் கடலில் சென்று மறைவுற, நீ சிறுமையுற்று துயர் உறுக" என்று இடியென முழங்கி சாபமிட்டான்.

## சாபத்தின் விளைவு

தேவ மடந்தையர் நவநிதிகள், காமதேனு, ஐராவதம் முதலான அனைத்து செல்வங்களும் இந்திரனை விட்டு அகன்றன. உவர்க்கடலுள் சென்று ஒடுங்கின. மாமுனியின் சினத்தால், விண்ணும், மண்ணும் வறுமையுற்றன. தேவர்களும், இந்திரனும், நான்முகனும் திருமாலைச் சரணடைந்தனர்.

தேவர்களும், நான்முகனும் நடந்தவற்றை திருமாலிடம் கூறினர். அபயம் வேண்டி நின்ற அமரர்களை நோக்கி திருமாலும், நீங்கள் அஞ்ச வேண்டாம் என்று அபயக்கரம் கொடுத்தான். மந்தார மலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு அசுரர்களும், தேவர்களும் கடலைக் கடைந்தால் கடலுள் மறைந்தவை வெளித்தோன்றும் என்று கூறி கடலைக் கடையுங்கால் தானும் வந்து அருள்புரிவதாக திருமால் கூறினார். திருமாலைப் புகழ்ந்து வணங்கிய தேவர்கள், திருமாலின் திருவுளப்படி கடலைக் கடைவதற்கு ஆவன செய்யத் தலைப்பட்டனர். திருமால் ஆமை உருக்கொண்டு, மந்தார மலையைத் தன் முதுகிலே சுமக்க கடலைக் கடைந்தபொழுது, கடலுள் மறைந்த செல்வங்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக வெளிவர திருமால் அருள் செய்தார். இந்திரனை விட்டு நீங்கிய செல்வங்கள் அனைத்தும் கிடைத்தன, கடலில் அமிழ்தம் தோன்றியது.

அதனைப் பருகும் பொருட்டு, அமரரும், அசுரரும் போரிடலானார். திருமால் அழகிய மோகினி வடிவம் கொண்டு, அசுரர்தனதழகிலே மயங்குமாறு செய்யவே, அவர்களைத் தேவர்கள் எளிதில் வென்றழித்து, அமிழ்தத்தைத் தமக்கே உரியதாக்கி உண்டனர்.

அசுரர்களை ஈன்ற அன்னையாகிய திதி, அசுரர்கள் அழிந்ததை அறிந்தாள். பெருந்துயர் கொண்டு, தன் கணவன் காசிபன் மலரடி வணங்கினாள். இந்திரன் முதலான தேவர்களின் சூழ்ச்சியால் தன் மக்கள் இறந்ததைக் கூறி, தன் மக்களை அழித்த அமரர்களை அழிக்கத்தக்க அருமைந்தனைத் தனக்குத் தந்தருளுமாறு அவளுடைய கணவன் காசிபனிடம் வேண்டி நின்றாள். அவள் வேண்டுகோளிற்குச் செவிமடுத்த காசிபன் "நீ விரும்பிய வரம் தந்தேன். நீ பூமியில் சென்று ஓராயிரம் ஆண்டுகள் நிலையாக நின்று மாதவம் செய்வாயாகில் நீ நினைத்தது கை கூடும்". என்றான். கணவனின் கட்டளையை ஏற்று திதி கடுந்தவம் புரியலானாள். அதனையறிந்த இந்திரன், திதியின் தவம் ஈடேறினால் தேவர்களுக்குத் தீங்கு வரும் என்று எண்ணினான். அதனைத் தவிர்க்கும் பொருட்டு, அவள் விரும்பும் சீடனாக திதியிடம் சென்று, மனமுவக்கும்படி பல தொண்டுகளைச் செய்து வந்தான். ஒருநாள் அவள் தவத்திற்குத் தகாதமுறையில் அயர்ந்து உறங்கினாள். அதுகண்ட இந்திரன்,

தக்க தருணமென எண்ணி, சிற்றுருக் கொண்டு அவள் வயிற்றுள் புகுந்து , தன் வச்சிராயுதத்தால், கருவை ஏழு கூறுகளாகச் சிதைத்து விட்டான். அதனை உணர்ந்த திதி மிக வருந்தினாள். அவள் நிலைக்கு இரங்கிய இந்திரன், அக்கூறுகள் (சப்த மருத்துக்கள்) ஏழு மருத்துக்கள் என்ற பெயருடன் எங்கும் உலவிவர அருள் செய்தான். அந்தத் திதி அமர்ந்து தவம் செய்ததே இச் சோலையாகும் என்று விசுவாமித்திரர் கூறி முடித்தார்.

<u>கங்கையின் வரலாறு</u>

இரகு வம்சத்தில் தோன்றிய சகரன் என்ற பேரரசன் அயோத்தியை ஆண்டு வந்தான். சகரனுக்கு மனைவியர் இருவர் இருந்தனர். இவருள் மூத்தவள் விதர்ப்ப நாட்டரசன் மகள் கேசினியாவாள். இளையவள் காசிப முனிவருக்கு விந்தையிடம் (கருடனுக்குப்பின்) பிறந்த சுமதி என்பவளாவாள். கேசினி பெற்ற மகன் அசமஞ்சன் என்றழைக்கப்பட்டான். சுமதியின் வயிற்றில் தோன்றிய கருவினின்று தோன்றிய பிண்டம் வெடித்துச் சிதறியது. அதனின்றும் அறுபதினாயிரம் புதல்வர்கள் தோன்றினர்.

மூத்தவளுக்குப் பிறந்த அசமஞ்சன் சிறுகுழந்தைகளை எடுத்து ஆற்றிலிட்டுக் கொன்று, மகிழும் கொடுஞ்செயலுடையவனாய் இருந்தான். ஆதலின், அவன்தந்தை அவனைக் கானகத்திற்குத் துரத்தினான். காட்டை அடைந்த அருஞ்சமன் கடுந்தவம் இயற்றி, தன் வலிமையால் இறந்த குழந்தைகளை உயிர்ப்பித்தான்.

சகரன் மைந்தர்கள் அறுபதினாயிர வரும் அளவில்லா ஆற்றல் பெற்று விளங்கினர். தன் மைந்தர்களின் வலிமையைக் கண்டு மகிழ்ந்த சகரன் அசுவமேதயாகம் நிகழ்த்த விழைந்தான். இதை அறிந்த தேவர்கள் அஞ்சி, தேவர்கள் தலைவன் இந்திரனிடம் முறையிட்டனர். சகரனின் அசுவமேதயாகத்தைப் பொறாத இந்திரன், வேள்விக் குதிரையைப் பாதாள உலகில் தவம்புரியும் கபில முனிவரின் இருப்பிடத்தில் மறைத்து வைத்தான். அசமஞ்சனுக்குப் புதல்வனாய்த் தோன்றிய அஞ்சுமான் வேள்விக் குதிரையின் பின்னே சென்றவன் குதிரையைக் காணாது திகைத்து, கலங்கி, புவுலகு எங்கணும் தேடித் திரிந்தான். எங்கு தேடியும் குதிரை அகப்படாமையால், அஞ்சுமான் தன் பாட்டன் சகரனிடம் நிகழ்ந்தவற்றைக் கூறினான். செய்தியையறிந்த சகரன் தன்மக்கள் அறுபதினாயிரவரையும் அழைத்து, தன் வருத்தத்தைப் போக்க வேண்டினான். கேட்ட மக்கள் சினந்து எழுந்தனர். மண்ணுலகில் எங்கணும் தேடிவிட்டதால், பாதாளம் செல்லும் பொருட்டு, பூமியைத் தோண்டி உள்ளே புகுந்தனர். அங்கு கபிலமுனிவரின் பின் குதிரையைக் கண்டனர். முனிவரே குதிரையைக் கவர்ந்ததாகக் கருதி, அவரை வசைபாடி, வருத்தினர். சினம்கொண்ட கபிலமுனிவரின் பார்வையால் அறுபதினாயிரவரும் சாம்பலாக மாறினர். ஒற்றர்கள்வழி செய்தியறிந்த சகரன் துன்படைந்தான். தன் மைந்தன்

அசமஞ்சனை அழைத்து, அடுத்து மேற்கொள்ள வேண்டியது யாதென வினவினான். தொடங்கிய வேள்வியை இடையில் விடுவதா என்று கலங்கி, தயங்கினான். தந்தையின் கருத்தறிந்த தனயன் கபில முனிவரிடம் சென்றான். அங்கு தன் சகோதரர்களின் சாம்பல் மலையென குவிந்திருக்கக் கண்டு திடுக்கிட்டான். பின் முனிவரைக் கண்டு, வணங்கி, வாயாரப் புகழ்ந்தான். தன்னை வணங்கியவனைக் குதிரையைக் கொண்டு செல்லப் பணித்தார். அஞ்சுமான் குதிரையைக் கொண்டு வந்தான். சகரன் தேவர்களுக்குரிய முறையில் அவிர்ப்பாகம் அளித்து, தொடங்கிய வேள்வியை முடித்தான். பின் ஆட்சியை அஞ்சுமானிடம் அளித்துவிட்டு, வானுலகு ஏகினான். சகரர் தோண்டியதால், கடல் சாகரம் என்ற பெயருடன் விளங்குகின்றது.

உலகு முழுவதையும் அஞ்சுமான் ஆண்டு வந்தான். அவன் மரபில் பரிதிபோல் ஒளியுடன், பகீரதன் என்பவன் தோன்றினான். பகீரதன் அரசாண்டு வருங்கால், கபிலமுனிவரால் அழிந்துபட்ட பகீரதனுடைய முன்னோர்களின் வரலாற்றை வசிட்ட முனிவர் எடுத்துரைத்தார். அதுகேட்ட பகீரதன், முனிவரின் சாபத்தால் அழிந்தவர்களை எவ்வாறேனும் நற்கதி அடைவிக்கக் கருதி, அதற்கு வழி இருப்பின் கூறுமாறு வசிட்டரை வேண்டினான். பகீரதனிடம் நெடுங்காலம் பிரம்மனை நோக்கி தவம் செய்யுமாறு வசிட்டர் கூறினார். அதனை மனதிற்கொண்ட பகீரதன் ஆட்சியைச் சுமந்திரனிடம் ஒப்படைத்துவிட்டு, இமயமலைச் சாரலை அடைந்தான்.

பதினாயிரம் ஆண்டுகள் கடுந்தவம் செய்தான். அவன்முன் நான்முகன் தோன்றி, ஆகாய கங்கை புவுலகில் பாய்ந்து இறந்த அவனுடைய முன்னோர்களின் எலும்புகளில் படியுமானால் அவர்கள் நற்கதி அடைவரென கூறினான். ஆகாய கங்கை நதி நேரே பூமியில் விழுந்தால், அதன் வேகத்தை மண்மகளால் தாங்க இயலாது; அதனைத் தாங்கும் ஆற்றல் சிவபெருமானுக்கே உண்டு. ஆதலின், அப்பெருமானைக் குறித்து தவம் செய்யுமாறு பிரம்மன் பணித்தான். மங்கையொருபாகனை மனதில் எண்ணி, பகீரதன் பதினாயிரம் ஆண்டுகாலம் தவம் செய்தான். தீதுழல் நிறக்கடவுள் அவன்முன் தோன்றி, அவன் கருத்தை நிறைவேற்றுவதாக வரக்குறுதி வழங்கினான். ஐயாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரே கங்கையைத் தொழும்பேறு கிட்டியது.

கங்கையானவள் ஒரு மங்கை வடிவு கொண்டு பகீரதன் முன் வந்தாள். "நின் தவம் எதைக் கருதியது? வான் கங்கை நிலத்திற்குவரின் சிவனாலும் அவள் வேகத்தைத் தாங்குதல் அரிது. சிவன் உன்னிடம் கூறிய சொல் உண்மையன்று. உன் தவத்தில் குறையுள்ளது. அதையறிந்து மீண்டும் கடுந்தவம் புரிக" என்றுரைத்து, மறைந்தாள். பகீரதன், அவள் சொற்களைக் கேட்டு வருந்தினான். மீண்டும் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகள் இடையீடின்றி தவம் புரிந்தான். சிவன் அவன்முன் தோன்றினான். கங்காதேவி உரைத்ததை அரனிடம் பகர்ந்தான். அதுகேட்டு சிவன், அஞ்சாதே!

கங்கைநீர் சிறிதும் புறத்தே சிந்தாதவாறு அடக்குவோம்" என்று கூறி மறைந்தார்.

பகீரதன் இரண்டரையாயிரம் ஆண்டுகள் கங்கையைக் குறித்து கடுந்தவம் இயற்றினான். உலர்ந்த சருகையும், புழுதியையும், நீரையும், காற்றையும் , ஒளியையும் உட்கொண்டு முதிர்ந்த அன்பால் முப்பதினாயிரம் ஆண்டுகள்முழுமையாக அருந்தவம் செய்து முடித்தான். பிரம்மலோகமும், தேவலோகமும் அஞ்ச ஆரவாரத்துடன் வான்கங்கை பூமியை நோக்கி விரைந்தாள். சிவபெருமான் கங்கைநீர் சிந்தாவண்ணம் தன் சடையில் ஏற்றான். புல்நுனியில் படிந்த பனித்துளியாய் புனிதன் சென்னியில், கங்கை மறைந்ததைக் கண்டு பகீரதன் திகைத்து, சிவனை வணங்கி நின்றான். சிவபெருமான் தலையிலுள்ள கங்காநதியைப் பூமியில் இறங்கச் செய்ய, கங்கை விரைந்து செல்லுங்கால், வழியிலிருந்த சன்னு முனிவர் ஆசிரமத்தில் புகுந்து, அங்கு நிகழ்ந்த வேள்வியைச் சிதைத்தது. முனிவர் பெருஞ்சினங் கொண்டு, தன் தவ வலிமையால் கங்கையைத் தன் ஒருகையில் அடக்கிப் பருகினார். இதனைக் கண்ணுற்ற பகீரதன் வருந்தி, முனிவரை வணங்கி, நடந்த நிகழ்ச்சிகள் யாவும் கூறினான். மனம் இரங்கிய முனிவர் மீண்டும் கங்கையைத் தன்காது வழியே வெளிவரச் செய்தார். கங்கை சகரபுத்திரர்களின் சாம்பலில் படிய அவர்கள் நற்கதி அடைந்தனர். பகீரதன் அயோத்தியை அடைந்து ஆட்சி செய்து வரலானான்.

திருமால் திருவடித் தாமரையில், தீர்த்தமாகத் தோன்றி நான்முகன் கமண்டலத்தில் புண்ணிய தீர்த்தமாகி, பகீரதன் தவத்தால் கங்கை மண்ணுலகை அடைந்தது. பகீரதனின் முயற்சியால் பாரை அடைந்ததால், பாகீரதி என்னும் பெயரைப் பெற்றது. பின்பு சன்னு முனிவரின் காதுவழியே வெளிப்பட்டதால், சானவி என்ற பெயரும் வந்தது.

கங்கையின் இந்த வரலாற்றை விசுவாமித்திரர் கூற, இராமனும், இலக்குவனனும் வியந்து கங்கையைத் தொழுது நின்றனர்.

## முடிவுரை

இராமாயணத்தில் முதன் முதலாக இடம் பெறும் அகலிகை கதையானது இராமாயண காலத்திற்கு முற்பட்ட கதையாகும்.

வடமொழிப் புலவர்கள் பலரும் அகலிகை கதையினை பல்வேறுபட்ட மாற்றங்களுடன் எழுதியுள்ளனர்.

இராமாயணம் மொழிபெயர்க்கப்பட்டு எழுதப்பட்டிருக்கும் ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு விதமாகக் கூறப்பட்டுள்ளது.

தொன்மையின் ஆதிக்கம் செலுத்தும் மகாபாரதக் கதையுள்ளும் மற்ற புராணங்களிலும் அகலிகையின் பல்வேறு குணநலன்கள் பேசப்படுகின்றன.